1971 ஜூலே 19] [திரு. செ. மாதவன்]

இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்த மாநிலத்திலுள்ள ரேயான் நூல் உண்மையில் பயன்படுத்துபவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதை சேலத்தில் அரசு சார்பிலே வட்டாரக் குழு ஒன்று கவனிக்கிறது. இதைத் தவிர, லிங்கோல் இழைத் துணி ஏற்றுமதி செய்வதால் ஏற்படும் குறைவை நிறைவு செய்வதற்காக நூற்பவர் ஒவ்வொருவரும்தான் உற்பத்தி செய்கிற நூலில் முதல்தரமான 10 சதவீத நூலே ஒதுக்கி வைக்க வேண்டும். நூற்போர் உற்பத்தியில் எஞ்சியவற்றை வெளிச்சந்தையில் விற்கலாம்.

எனவே, செயற்கைப் பட்டு நூலின் ஒரு பகுதி தேவை மட்டுமே வரையறுக்கப்பட்ட விலேகளில் கிடைக்கிறது என்பது இதனுல் தெரியவரும். இந்தத் தன்னிர்சை விநியோகத் திட்டம், கூட பகிர்ந்தளிப்பதிலுள்ள குறைபாடுகளின் காரணமாக, நியாய விலேகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவு நூலே வழங்க இயலவில்லே. இதனுல், உண்மையில் ரேயான் நூலேப் பயன் படுத்துபவர்கள் தங்களது பெருமளவு நூல் தேவைகளுக்காக வெளிச் சந்தைக்குச் சென்று அதிக விலேயில் நூல் பெற வேண்டியதாயுள்ளது. செயற்கைப் பட்டு நூலின் பகிர்ந்து அளிப்பையும் விலேயையும் கட்டுப்படுத்த மாநிலத்திற்குச் சட்டப் படிக்கான அதிகாரங்களே இந்திய அரசு கொடுத்தாலொழிய இதற்கு நிலேயான தீர்வு காண்பது இயலாததாகும். கைத்தறி நெசவாளர்கள் தங்களது முழுத் தேவைகளுக்கும் போதுமான அளவு நூலே வெளிச் சந்தையில் பெற வகை செய்வதற்காக, அரசு வணிகக் கழகம் கூப்ராமோனியம் செயற்கைப்பட்டு நூலே இறக்குமதி செய்து அதைப் போதுமான அளவு வெளிச் சந்தையில் கிடைக்கச் செய்ய அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென இந்திய அரசை நமது அரசு எழுதிக் கேட்டுக்கொண்டுள்ளது.

திரு. கி. ஜெயராமன் : நார்ப்பட்டை விநியோகிக்கும் பொறுப்பு தனிப்பட்ட குழுவுக்கு இருப்பதை மாற்றி மாநில அரசு இயக்குநர் அவர்கள் சிபார்சின்படி உபயோகிப்போருக்கு மட்டுமே விநியோகிக்கும் வகையில் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்ல யோசனே. இந்த யோசனேயை அரசு ஏற்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறது.

3. அறிக்கை அளித்தல்

நெடுஞ்சாலேகள் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை மீதான அறிக்கை

THIRU K. VEZHAVENDAN : Mr. Speaker, Sir, I rise to present the First Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Highways and Rural Works.